வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 28.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

அரசியல் சாசன உணர்வின் படி சமூக நீதி மற்றும் சமத்துவப் பாதையை, அரசு பின்பற்றுவதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, நாடாளுமன்ற உரையில் கூறி உள்ளார்.

திறமையும், கலாச்சார சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற இந்திய இளைஞர்களை, உலகமே எதிர்நோக்கி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இன்று விமான விபத்தில் உயிர் இழந்த மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவார் மறைவு குறித்து, குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து, சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகம் இன்று காரைக்காலில், ஊடகத் துறையினருக்கான விழிப்புணர்வு பயிலரங்கு ஒன்றை நடத்தியது.

முர்மு-உரை

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது இந்திய பாதுகாப்பு படைகளின் வல்லமை மற்றும் வீரத்தை உலகமே கண்டதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்க நாளான இன்று, இருஅவைகளின் கலப்புக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்தியா தன் சொந்தத் திறன்களின் அடிப்படையில், தீவிரவாத முகாம்களை தாக்கி, அழித்து

இருப்பதாகவும், தீவிரவாத தாக்குதல்களுக்கு சரியான பதிலடி கொடுக்கப்படும் என்பதே, இதன் மூலம் இந்தியா வழங்கி உள்ள செய்தி என்றும் கூறினார். பாதுகாப்பு படைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான சுதர்சன் சக்ரா இயக்கம் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருவதாகவும் நாட்டின் பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு எதிராகவும், பாதுகாப்பு படையினர் வலுவான நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த அவர், நாட்டில் மாவோயிஸ்ட் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை, 126-ல் இருந்து வெறும் 8-ஆக குறைக்கப் பட்டுள்ளதாகக் கூறினார். குடியரசு தலைவரின் உரை குறித்து கூடுதல் தகவல்கள் ………………… (வாய்ஸ்)

சமூக நீதி மற்றும் சமத்துவம் என்பதே அண்ணல் அம்பேத்கார் வலியுறுத்திய பாதை என்றும், அரசியல் சாசன உணர்வுகளின் படி அரசு இதே பாதையை பின்பற்றி நடப்பதாகவும் குடியரசு தலைவர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள், வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதே, இதற்கு சான்றாகும் என்று அவர் குறிப்பிட்டார். நாட்டில் சமூக பாதுகாப்பு திட்ட பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 95 கோடியாக அதிகரித்து இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதில், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், தொழில் முனைவோர் உட்பட அனைத்து தரப்பினரும் அதிக அளவில் பங்களித்து வருவதைக் கண்டு, தாம் மகிழ்ச்சி அடைவதாக குடியரசு தலைவர் கூறினார். விவசாயிகளுக்கு ஆதரவான அரசின் கொள்கைகளால், நாட்டின் வேளாண் உற்பத்தி வேகமாக அதிகரித்து இருப்பதாகவும், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் உட்பட அனைத்து வேளாண் பொருட்களின் இறக்குமதியை குறைப்பதே அரசின் நோக்கம் என்றும் அவர் கூறினார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான நாட்டின் மொத்த மின்சார உற்பத்தி திறன் , 2030-ஆம் ஆண்டிற்குள் 500 கிகா வாட்டாக எட்டப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

விக்சித் பாரத்- ஜி ராம் ஜி திட்டத்தினால் கிராமபுற மக்களுக்கான வேலை உத்தரவாத நாட்களின் எண்ணிக்கை, 125-ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் வேலை உத்தரவாத திட்டத்தில், ஓட்டைகளை அடைக்க புதிய திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றும், திருமதி திரவுபதி முர்மு கூறினார். பாரதிய நியாய சம்ஹிதா சட்டத்தினால், மக்களிடையே சட்டம் குறித்த அச்சம் நீங்கி நம்பிக்கை அதிகரித்து இருப்பதாகவும் கிரிமினல் குற்றங்கள் என்ற வகைப்பாட்டில் இருந்து, இதுவரை சுமார் 300 செயல்பாடுகள், நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை நோக்கிய நாட்டின் சீர்திருத்த எக்ஸ்பிரஸ், தொடர்ந்து முடுக்கி விடப்படும் என்றும், அரசு, நாடாளுமன்றம், மக்கள் உட்பட அனைத்து தரப்பினரும், முன்னேறிய இந்தியா என்னும் ஒரே இலக்கை நோக்கி, ஒருங்கிணைந்து பாடுபடுவார்கள் எனத் தாம் நம்புவதாகவும், குடியரசு தலைவர் மேலும் குறிப்பிட்டார். ED/RSS/MAL/-28.1.2026

முர்மு-உ⃞சேர்க்கை-

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை, அண்மைக்காலங்களில் வளர்ச்சி பயணத்தில் இந்தியா எட்டி உள்ள அபார வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். ஆழமான அகப் பார்வையுடன் கூடிய, விரிவான இந்த உரையில், முன்னேறிய, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்கும் கனவு குறித்து சரியாக வலியுறுத்தப் பட்டுள்ளதாக, சமூக ஊடகத்தில் பிரதமர் கூறி உள்ளார். இன்று நாடாளுமன்றத்தில் குடியரசு தலைவர் உரையாற்றிய நிகழ்வில், ரஷ்யா, ஆஸ்திரேலியா, சீனா, பங்களாதேஷ் உட்பட 37 நாடுகளின் தூதர்களும் கலந்து கொண்டனர். குடியரசு தலைவர் உரையின் போது நாடாளுமன்றத்தில் எதிர் கட்சிகள் நடந்து கொண்ட விதம் நாட்டிற்கே வெட்க கேடானது என்று, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

*மோடி என்சிசி*

இந்தியாவின் இன்றைய இளைஞர்கள், நாட்டிற்கே முதலிடம் என்னும் உறுதிப்பாட்டின் வரையறையாகத் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் உள்ள கரியப்பா அணிவகுப்பு மைதானத்தில், பிரதமரின் வருடாந்திர என்சிசி பேரணியில் அவர் பேசுகையில், திறமையும், கலாச்சார சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற இந்திய இளைஞர்களை, தற்போது உலகமே எதிர்நோக்கி இருப்பதாக கூறினார். இந்திய இளைஞர்களை ஒழுக்கமும் நம்பிக்கையும் நிறைந்தவர்களாக மாற்றும் இயக்கமே என்சிசி என்று, பிரதமர் கூறினார். தேசிய மாணவர் படையில், கடலோர மற்றும் எல்லைப் புற மாணாக்கர் எண்ணிக்கை, குறிப்பாக பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார். தலைநகரில் ஒரு மாத காலம் நடைபெற்ற குடியரசு தின என்சிசி முகாமின் நிறைவைக் குறிக்கும் வகையிலான இப்பேரணியில், இளைஞர் மேம்பாட்டில் தேசிய மாணவர் படையின் பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையில் வண்ணமயமான கலாச்சார நிகழ்ச்சிகளும், இடம் பெற்றன.

*மோடி-ஆயுஷ்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கேரள மாநிலம் ஆரிய வைத்திய சாலையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் மெய்நிகர் முறையில் கலந்து கொண்டார். நலவாழ்வை மேம்படுத்துவதில் ஆயுர்வேதத்தின் பங்களிப்பு, போற்றத் தக்கது என்று அவர் தமது உரையில் கூறினார். மத்திய அரசு நாடு முழுவதும் 12 ஆயிரம் ஆயுஷ் ஆரோக்ய மற்றும் நலவாழ்வு மையங்களை நிறுவி செயல்படுத்தி வருவதை பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்தியாவிற்கும்-ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளும் ஊக்கம் பெறும் என அவர் தெரிவித்தார்.

*அஜித் பவார் (16)*

மகாராஷ்டிர மாநிலம் பாராமதி மாவட்டத்தில் இன்று விமான விபத்தில் உயிர் இழந்த அம்மாநில துணை முதலமைச்சர் அஜித் பவார்

மறைவு குறித்து, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட பலரும், இரங்கல் தெரிவித்துள்ளனர். அஜித்பவாரின் அகால மரணம், ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் மகாராஷ்டிர மாநிலத்தில் கூட்டுறவு உட்பட பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு அஜித் பவார் ஆற்றிய பணிகள், எப்போதும் நினைவில் கொள்ளப்படும் என்றும் சமூக ஊடகத்தில், குடியரசு தலைவர் கூறி உள்ளார். அடித்தட்டு மக்களுடனான நேரடி தொடர்பு மூலம், மக்கள் தலைவராகவே திகழ்ந்தவர் அஜித் பவார் என்றும், ஏழைகளின் அதிகாரப் பங்கேற்பில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அவர், நிர்வாகத் திறன்களுக்கு புகழ் பெற்றவர் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் செய்தியில் கூறி உள்ளார். திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங், திரு அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோரும் அஜித் பவார் மறைவு குறித்து துயரம் வெளியிட்டுள்ளனர்.

காை□க்கால் (10)

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து, சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகம் இன்று காரைக்காலில், ஊடகத் துறையினருக்கான, விழிப்புணர்வு பயிலரங்கு ஒன்றை நடத்தியது. பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குநர் திரு வி பழனிசாமி இதற்கு தலைமை ஏற்றுப் பேசுகையில், உண்மையான, ஆக்கப்பூர்வ தகவல்களை மட்டுமே ஊடகங்கள் வெளியிட வேண்டும் என வலியுறுத்தினார். செய்தி அறைகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, தொழில் நுட்ப ஆய்வுகளை மக்கள் விரும்பும் செய்திகளாக மாற்றுதல், உணவு பாதுகாப்பில் இந்திய உணவு கழகத்தின் பங்கு, போன்ற தலைப்புகளில், முக்கிய அமர்வுகள், இப்பயிலரங்கில் இடம் பெற்றன.

பி□கதி

உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர்

திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட பிரகதி டிஜிட்டல் வசதி, உயர்நிலை தலையீடு மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. உத்தரபிரதேஷ் மாநிலத்தில், சக்கேரி-அலகாபாத் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவை 6 வழிப் பாதையாக மாற்றும் திட்டம், பிரகதி மறுஆய்வு மூலம், திறம்பட்ட முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டது குறித்து ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

கான்பூர், கொசாம்பி, பிரயாக்ராஜ் உட்பட முக்கிய தொழில் நகரங்கள் மற்றும் ஆன்மிக பகுதிகளை ஒருங்கிணைக்கும் வகையிலான சக்கேரி-அலகாபாத் 6 வழி நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சகம், கடந்த 2017-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒப்புதல் அளித்தது. நில ஆர்ஜிதம், சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் இழப்பீட்டு தொகை குறித்த பிரச்சனைகளால், முக்கியமான இத்திட்டத்தின் அமலாக்கம் தடைப்பட்டிருந்த நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த 2019-ஆம் ஆண்டு ஜூலை மாதம், பிரகதி வசதி மூலம் திட்டப் பணிகளை மறு ஆய்வு செய்து, நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டு தொகையை உடனடியாக வழங்கவும், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களை திட்டப் பணிகளுக்கு ஒப்படைக்கவும், உத்தரபிரதேஷ் அரசுக்கு உத்தரவிட்டார். திட்டத்தின் அமலாக்கப் பணிகளை துரிதப்படுத்த, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்திற்கும் அறிவுறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து தடைகள் நீக்கப்பட்டு திட்டப் பணிகள் துரிதமானதால், கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. உயர்நிலை கண்காணிப்பு மூலம் முக்கிய திட்டங்களை திறம்பட்ட முறையில் நிறைவேற்றி முடிப்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக, சக்கேரி- அலகாபாத் 6 வழி நெடுஞ்சாலைத் திட்டம் திகழ்வதில் ஐயமில்லை.

வானிலை

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் வரும் 30-ஆம் தேதி வரை வறண்ட வானிலை நிலவும் என்றும், 31 முதல் அடுத்த மாதம் 2-ஆம் தேதி வரை தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் லேசான மழைபெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேலத்தில் 33.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. கொடைக்கானலில் 8.1 டிகிரி செல்சியஸ் குறைந்த பட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4-ஆவது 20 ஓவர் போட்டி, விசாகப் பட்டிணத்தில் இன்று மாலை நடைபெற உள்ளது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் ஏற்கனவே முடிந்து விட்ட 3 போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்று, அசைக்க முடியாத முன்னிலையில் உள்ளது. மகளிர் கிரிக்கெட்டில் உத்தரபிரதேஷ்- பெங்களுர்அணிகளுக்கு இடையிலான, WPL போட்டி, வதோதராவில் நாளை மாலை நடைபெறும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

அரசியல் சாசன உணர்வின் படி சமூக நீதி மற்றும் சமத்துவப் பாதையை, அரசு பின்பற்றுவதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, நாடாளுமன்ற உரையில் கூறி உள்ளார்.

திறமையும், கலாச்சார சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற இந்திய இளைஞர்களை, உலகமே எதிர்நோக்கி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இன்று விமான விபத்தில் உயிர் இழந்த மகாராஷ்டிர துணை முதலமைச்சர் அஜித் பவார் மறைவு குறித்து, குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து, சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகம் இன்று காரைக்காலில், ஊடகத் துறையினருக்கான விழிப்புணர்வு பயிலரங்கு ஒன்றை நடத்தியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------------